Registered as a Newspaper

பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39

கதிர் : 65

செவ்வாய்க்கிழமை

30 ஜனவரி 2024

முச்சந்தி முரளி



"சோழரிட்ட தோத்த வரலாறு தெரியாமல் உவர் உருட்டுற உருட்டுக்கு ஆரும் கிட்ட நிக்க முடியாது கண்டியளோ"



சோழர்களிடமே மண்டியிடாத எம்மை

# எட்கா உடன்படிக்கையால் ஆக்கிரமிக்க இந்தியா முயற்சி

## பதறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜனவரி 30

முடியாட்சியின்போதும் சோழர்களின் ஆக்கிரமிப் பின்போதும் எமது மன்னர்கள் மண்டியிடவில்லை, சமரிட்டு நாட்டைப் பாதுகாத்தனர், இன்று குடியாட்சியின்போது எட்கா ஒப்பந்தம்மூலம் இலங்கையை இந்தியாவின் மாநிலமாக மாற்றுவதற்கான நகர்வுகள் இடம்பெறுகின்றன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

11

கொழும்பில் இன்று

## 'அரகலய' போன்று மாபெரும் போராட்டம்

கொழும்பு. ஜன. 30

கொழும்பிலுள்ள அரச திணைக்களங்களை முடக்கி 'அரகலய' போன்று மாபெரும் போராட்டத்தை நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி இதற்காக நாடு முழுவதிலும் இருந்து ஒரு இலட்சம் பேர் வரையில் அணிதிரளவுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

11

கோம்பயன்மணல்

## மருத்துவக்கழிவு எரியூட்டி மார்ச்சிலிருந்து இயங்கும்

பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம். ஜன. 30

கோம்பயன்மணல் மருத்துவக் கழிவு எரியூட்டி எதிர்வரும் மார்ச் மாதம் முதல் இயங்கும் என வடமாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளரும் யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளருமான மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

11



யாழ். மாவட்ட

## பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க நியமனம்

யாழ்ப்பாணம். ஜன. 30

யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க நேற்றுத் திங்கட்கிழமை, யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார். இதன்போது மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்

11

## 31 ஆயிரம் போதைமாத்திரைகளுடன் இளைஞன் கைது

விரிவு:- பக்.11

## கஞ்சாவுடன் கைதானவருக்கு மறியல்

யாழ்ப்பாணம். ஜன. 30

பனிப்புலத்தில் நேற்றுமுன்தினம் உயிர்கொல்லி கஞ்சாவுடன் கைதானவரை விளக்க மறியலில் வைக்கு

11

## ஹெரோய்னுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம். ஜன. 30

உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளவாலை,

11

## அரிசியில் தன்னிறைவு இறக்குமதி நிறுத்தம்

அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவிப்பு



கொழும்பு, ஜன. 30

அரிசித் தேவையில் இலங்கை தன்னிறைவு பெற்றுள்ளதால், அரிசி இறக்குமதி செய்ய இந்த ஆண்டு எதிர்பார்க்கவில்லை

11

## கடற்கொள்ளையர்களிடமிருந்து இலங்கைப்படகு பத்திரமாக மீட்பு

விரிவு பக்கம் 11

## முல்லைக் கடலில் மாயமானவரின் சடலம் கரையோதுங்கியது!

முல்லைத்தீவு, ஜன. 30

முல்லைத்தீவுக் கடலில் காணாமல் போன குடும்பத்தலைவரின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியது.

புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசதுரை கஸ்தூரன்

11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மருத்துவமனையில் நிரம்பிவழியும் விடுதிகள்

## நெருக்கடியால் நோயாளர்கள் அவதி

கிளிநொச்சி, ஜன.30
கிளிநொச்சி, பொது மருத்துவமனையின் விடுதிகளில் நோயாளர்கள் நிரம்பி வழிவதால் எந்தவித வசதியுமின்றி தரையில் படுத்துறங்கும் நிலைமை காணப்படுகின்றது என்றும், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நோயாளர்களின் நலன்கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-113)

## போதைப்பொருள் வர்த்தகம்; பெண் கைது

கொழும்பு, ஜன. 30
கொழும்பில் பெரியளவில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கல்கிஸை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணே பொரலஸ்கமுவை பிரதேசத்தில் வைத்து மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# ஐ.எம்.எப். கடனுக்காக 75 புதிய நிபந்தனைகள்

கொழும்பு, ஜன.30
**சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள இரண்டாம் தவணை கடன் தொகைக்காக 75 புதிய நிபந்தனைகளை விதித்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.**

முதலாம் தவணை கடன் தொகை தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் இலங்கை அரசாங்கம் இதுவரை பூர்த்தி செய்யாத 27 நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான காலக்கெடுவை புதுப்பிக்க அல்லது நீடிக்கவும் சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.
நாணய நிதியத்தின் முதலாம் தவணைக் கடன் தொகை வழங்கப்பட்ட போது, இலங்கை அரசாங்கத்திடம் 73 நிபந்தனைகளை முன்வைத்து அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.
கடந்த ஆண்டின் நவம்பர் இறுதிக்குள் நிறைவேற்றப்படவேண்டிய குறித்த 73 நிபந்தனைகளில் 60 நிபந்தனைகளை இலங்கை தாமதத்துடன் நிறைவேற்றியுள்ளது என்றும் நிறைவேற்றப்படாத 13 நிபந்தனைகளில் 8 நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
மீதியுள்ள 5 நிபந்தனைகள் கடுமையான நிபந்தனைகள் என்பதால் அவற்றை நிறைவேற்ற கால அவகாசம் தேவைப்படுவதாக அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## அநாதரவற்ற குழந்தைகளை பாதுகாக்கச் செயற்றிட்டம்!

கொழும்பு, ஜன. 30
அநாதரவற்ற நிலையில் உள்ள குழந்தைகளை அரசாங்கத்தின் பொறுப்பில் எடுத்து தகுந்த பாதுகாவலர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.
கடந்த ஆண்டில் தெருவோரக் குழந்தைகளை பொலிஸாரின் கட்டுப்பாட்டில் எடுக்கும் நடவடிக்கையில், யாசகம் எடுக்கப் பயன்படுத்தப்பட்ட 102 குழந்தைகள் மீட்கப்பட்டன.
இந்த நடவடிக்கை 2024 ஆம் ஆண்டிலும் தொடரும்- என்றார். (ச-இ)

## மொட்டைமாடியில் கஞ்சாத் தோட்டம்!

### அமெரிக்கர் கைது

கொழும்பு, ஜன. 30
கொழும்பு பெலியத்தையில் கட்டடத்தின் மேல் தளத்தில் கஞ்சாச் செடிகள் வளர்த்த குற்றச்சாட்டில் அமெரிக்கர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இவர் வாடகைக்கு எடுத்த வீட்டிலேயே இந்தக் கஞ்சாச் செடிகளை வளர்த்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.
அமெரிக்கரிடம் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)



### யாழ்.பல்கலையில்

# 108 பானைகளில் பொங்கல் விழா!

யாழ்ப்பாணம், ஜன. 30
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் 11 பீடங்களையும் ஒருங்கிணைத்து நடத்தப்பட்ட தமிழர் தேசியப் பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் இடம்பெற்றது.
பொங்கல் நிகழ்வில் மாணவர்களால் 108 பானையில் பொங்கல் பொங்கப்பட்டதுடன் கயிறிழுத்தல், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல் போன்ற தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளும் இடம்பெற்றன.
தொடர்ந்து கைலாசபதி கலையரங்கில் கலை, பண்பாட்டு நிகழ்வுகள் சிறப்புற்றன. (ச-125)

### செங்கடலில் நெருக்கடி

# கொழும்பில் தரிக்கும் கப்பல்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 30
செங்கடலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
செங்கடலில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக சூயஸ் கால்வாய் ஊடாக பயணிக்கும் வர்த்தக கப்பல்களுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுகிறது. மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் கிழக்கு ஆசிய பிராந்தியங்களுக்கான கப்பல் பாதையில் முக்கியமான துறைமுகமாக கொழும்பு அமைந்துள்ளது.
இந்தநிலையில் கப்பல்களைப் பாதுகாக்கும் வகையில் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு கப்பல் நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.
கொழும்புத் துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 24 கப்பல்கள் நங்கூரமிடுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## மணவாளக்கோலம்

ஆதிமயிலிட்டி, ஜன.30
ஆதிமயிலிட்டி, காசிப்பூதராயர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல உற்சவம் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சங்காபிஷேகத்துக்கான கிரியை வழிபாடுகள் ஆரம்பமாகி சங்காபிஷேகம், அபிஷேகம், பூஜை, ஆராதனைகள், திருக்கல்யாண வைபவம், பூதராயர் திருவீதி உலா வரும் திருக்காட்சி என்பன இடம்பெறுமென மேற்படி ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

## அலைபேசி வாங்குவதற்காக பாட்டியைக் கொன்ற பேரன்!

கொழும்பு, ஜன. 30
தனது பாட்டியை கொலை செய்த குற்றச்சாட்டில் 15 வயது சிறுவன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கொழும்பு பெலியத்த பகுதியில் கடந்த வாரம் நடந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சிறுவனிடம் மேற்கொண்ட விசாரணையில், கையடக்கத் தொலைபேசியொன்றை வாங்குவதற்காகவே பாட்டியை கொலை செய்து அவரது தங்கச் சங்கிலியை நண்பனிடம் கொடுத்து அடகு வைத்து பணம் பெற்றதாக வாக்குமூலமளித்துள்ளார். குறித்த சிறுவனையும் அவனது நண்பனையும் தங்காலை நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்திய நிலையில் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## ‘பாரதியின் வாழ்க்கைக் குறிப்பு’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.30
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால், மகாகவி பாரதியார் பற்றிய விடயங்களை சிறார்கள் சிறு பருவத்திலேயே அறிய வைக்கும் நோக்கோடு வெளியிடப்பட்ட ‘தெய்வம் நமக்குத் துணை பாப்பா - மகாகவி பாரதியின் வாழ்க்கைக் குறிப்பு’ எனும் நூலின் திருத்திய இரண்டாம் பதிப்பு வெளியிடப்படவுள்ளது.
எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு இந்த நூல் வெளியிடப்படவுள்ளது. கௌரவ அதிதியாக உலகப் புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். பாரதியின் வரலாற்றை உயிரோட்டமான ஓவியங்களால் கதை சொல்லும் படைப்பாக இந்த நூல் வெளிவரவுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ஆரம்பிக்கையில் போராட்டங்கள் வலுப்பெறும்

## ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 30

**அடுத்த தவணை பாடசாலை ஆரம்பமாகும்போது பெற்றோருடன் இணைந்து மிகப்பெரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவாக உயர்த்துதல், பெற்றோர் மீது சுமத்தப்படும் செலவுகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வை வலியுறுத்தி இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம், அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாக பாடசாலைகளின் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தும் சுமையை பெற்றோர் மீது மறைமுகமாக சுமத்த எத்தணிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## 60 மெகாவோட் மின் இணைப்பு

கொழும்பு, ஜன. 30

உமா ஓயா நீர்மின்சாரத் திட்டத்திலிருந்து 60 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 120 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இந்தத் திட்டத்திலிருந்து முதற்கட்டமாக 60 மெகாவோட் மின்சாரம் வெற்றிகரமாக மின்சார கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தில் மேலும் 60 மெகாவோட் மின்சாரத்தை பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இணைக்கமுடியும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)



## புலமைப்பரிசில் தொகை உயர்வு

கொழும்பு, ஜன. 30

மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவை 2024 பெப்ரவரி மாதம் முதல் ஆயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி நிதியம் இந்த புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

2021/2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

2024 பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6 ஆயிரம் ரூபாவாக மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஐ.எம்.எப்.பின் இலக்கு சாகலவிடம் பொறுப்பு!

கொழும்பு, ஜன.30

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு மூன்றாவது தவணையாக கிடைக்கப்பெறவுள்ள கடன் இலக்கை கண்டறியும் பொறுப்பு ஜனாதிபதியின் பணிப்பாளர் பிரதானி சாகல ரத்நாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை, அரச வீண் விரயம், மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது உள்ளிட்ட நாணய நிதியத்தின் இலக்குகளின் இரண்டாவது மதிப்பாய்வு எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தப்பட்ட பின் மூன்றாவது தவணைக் கடன்தொகையை வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-இ)

## மீனவரை மீட்க உதவும் இந்தியா

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடற்றொழில் கப்பலுடன் சிறைபிடிக்கப்பட்டுள்ள 6 இலங்கை கடற்றொழிலாளர்களை மீட்பதற்கு இந்தியா உதவுவதற்கு உறுதியளித்துள்ளதாக இலங்கை கடற்படை செய்தித் தொடர்பாளர் கயான் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி சிலாபம் துறைமுகத்திலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற பல நாள் கடற்றொழில் கப்பலையும், 6 கடற்றொழிலாளர்களையும் சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## 17 தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதிப்பு

கொழும்பு, ஜன. 30

அரச நிறைவேற்று அதிகாரி சேவைப் பிரிவைச் சேர்ந்த 17 தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல், அடிப்படை வேதனத்தை உயர்த்துதல் மற்றும் அதிகரித்துள்ள வரிச்சுமையைக் குறைத்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பொதுச் சேவை பொறியியலாளர்கள் சங்கம், ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம், கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கம், கட்டடக் கலைஞர்கள் சங்கம், கணக்கியல் சேவைகள் சங்கம், உள்நாட்டு வருமானவரி தொழிற்சங்க ஒன்றியம் உள்ளிட்ட 17 தொழிற்சங்கங்கள் இணைந்துள்ளன. (ச-இ)

## தினம் தெரியுமோ?

வழக்கமா தமிழரசுக் கட்சியின்ர பதவியளுக்கு பெரிசா போட்டி வாறேலை. மத்தியகுழுவில வைச்சு ஆராருக்கு என்னென்ன பதவி எண்டு முடிவெடுத்துப்போட்டு, அதைப் பொதுச்சபையில போட்டு ஒராள் முன்மொழிய, இன்னொராள் வழிமொழியிறதோட விசயம் முடிஞ்சிடும். இவ்வளவுநாளும் இதுதான் வழக்கமா இருந்ததால அதேமாதிரி இந்தமுறையும் மத்தியகுழுக் கூட்டம் ஒண்டை நடத்தி, தங்களுக்கு ஏத்த ஆக்களின்ர பேரை ஒவ்வொரு பதவியளுக்கும் போட்டிட்டு, வாக்கெடுப்பு இல்லாமல் அவையைக் கொண்டு வந்திடலாம் எண்டதுதான் யாழ்ப்பாணத்தில உள்ள அந்த ஹொட்டலில ரூம் போட்டு யோசிச்சவை எடுத்த முடிவு. ஒருவேளை தாங்கள் கொண்டந்த பட்டியலை பொதுச்சபைக்காரர் ஏற்காட்டி, அதைவைச்சே ஒரு குழப்பத்தை எடுக்கலாமெண்டது அவையின்ர மாற்றுப் பிளான்.

ஆனால் அதிலயும் அவைக்கு ஒரு சிக்கல். முதலே மத்தியகுழுவைக் கூட்டி, தாங்கள் நினைச்ச ஆக்களை பதவியளுக்குப் பிரேரிச்சா எப்பிடியும் அதை எதிர்க்க எதிர்க்கன்னைக்கு அவகாசம் கிடைச்சிடும். அப்பிடி அவை ஆக்களைக் கூட்டிக்கொண்டுவந்தால், தங்கட திட்டமெல்லாம் பாழாயிடும் எண்டதும் அவைக்குத் தெரியும். அதால இன்னொரு பிளான் போட்டிச்சினம். எப்ப பொதுச்சபைக்கூட்டம் நடக்குதோ அண்டைக்கு விடிய திடீரெண்டு மத்தியகுழுக் கூட்டத்தை வைச்சால், எதிர்க்கன்னை அதைச் சமாளிக்க ஏலாமல் தங்கட பக்கம் வரத்தானே வேணும். அதின்படி வெள்ளிக்கிழமை பொழுதுபடேக்கதான் கட்சியின்ர நிர்வாகச் செயலாளர் மத்தியகுழுக்காரருக்கு போன் எடுத்து 'நாளைக்கு விடிய 10 மணிக்கு மத்தியகுழுக் கூட்டம் இருக்கு' எண்டு அறிவிச்சிருக்கிறார். உண்மையில பொதுச்செயலாளருக்குத்தான் அப்பிடிக் கூட்டங்களுக்கு உறுப்பினர்மாரைக் கூப்பிடுற அதிகாரம் இருக்கு. ஆனால் ரண்டு மூண்டு கிழமையா பொதுச் செயலாளரின்ர சிலமனையேகாணேலை. கேட்டால் வருத்தம் எண்டு சொல்லுப்படுகுது. அதைவிடப் பகிடி என்னெண்டா இந்தப் பொதுச்சபைக் கூட்டம் நடக்கிறதுக்கு முதல் கிழமைதான் தலைவர் தெரிவு நடந்தது. அதுக்கு முதலும் ஒரு மத்தியகுழுக்கூட்டத்துக்கு நாலைஞ்சு நாளைக்கு முதலே அறிவிச்சிருந்தவை. ஆனால் பொதுச்செயலாளருக்கு சுகமில்லை எண்டு சொல்லி அந்தக் கூட்டத்தை கான்சல் பண்ணிப் போட்டினம். இப்பவும் அவருக்கு வருத்தம் மாறேலை எண்டு சொல்லுப்படுகுது. அப்பிடியிருந்தும் திண்ணையில படுத்தவனுக்கு திடுக்கெண்டு கலியாணம் நடந்தமாதிரி உந்த மத்தியகுழுக்கூட்டத்தையும் திடீரெண்டு முதல் நாள் இரவே அறிவிச்சு, அடுத்தநாள் விடிய நடத்தினவை. அதிலதான் தங்கட பக்க ஆக்களை பட்டியலுக்குள்ள போட்டிட்டு, அதை எல்லாரும் ஏற்கோணும் எண்டு சொல்லுப்பட்டிருக்கு. கட்சி உடையக்கூடாது எண்டதுக்காக கனபேர், ஒருமாதிரி அரைகுறை மனதோட சம்மதிச்சவையாம்.

பிறகு அந்த மத்தியகுழுக்கூட்ட முடிவை பொதுச்சபை எதிர்க்க, ஏற்கனவே பிளான் பண்ணினபடி குழப்பத்தைப் பெருசாக்கி இருக்கினம் ஹொட்டலுக்குப் போய் திட்டம்போட்ட குரூப். அண்டையான் கூட்டத்தில குழப்பம்தானா வரேலை, வலிஞ்சுதான் உருவாக்கினவை எண்டது இப்ப விளங்குதோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரப் பாதையில் பயணிக்கின்றார் ரணில்!

## சிவில் அமைப்புகள் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜன. 30**

**அடக்குமுறைச்சட்டங்களின் மூலம் ஜனாதிபதி நாட்டை சர்வாதிகாரப்பாதையில் கொண்டுசெல்கின்றார் என்று ஊடக உரிமைகளுக்கான அமைப்புகளும், சிவில் அமைப்புகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.**

சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களைக் கட்டுப்படுத்தும் நிகழ்நிலைக் காப்புச்சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அந்தச் சட்டவரைவு தொடர்பிலேயே மேற்படி அமைப்புகள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கடந்த வாரம் கொண்டுவரப்பட்ட நிகழ்நிலைக் காப்புச்சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் என்பவற்றின் மூலம் என்ன விலை கொடுத்தாவது வரப்போகும் தேர்தலில் வெற்றியீட்டி விட வேண்டுமென ஜனாதிபதி நினைக்கிறார். மக்களால் தெரிவு செய்யப்படாத ஒரு ஜனாதிபதிக்கு புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு எந்தவித தார்மீக உரிமையுமில்லை. நாகரிகமான அரசாங்கம் இந்தச் சட்டத்தை குப்பைக் கூடைக்குள் தான் போடும்.

இணையக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தச் சட்டம் தேவையில்லை. இந்தச் சட்டத்தை உடனடியாக மீளப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ம-6)

## மேழிவனம் குளத்தை புனரமைக்கவும்

முல்லைத்தீவு, மேழிவனம் கிராமத்தில் சேதமடைந்துள்ள குளத்தைப் புனரமைத்துத் தர வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேழிவனம் கிராமத்தில் பல ஆண்டுகளாக சேதமடைந்த நிலையில் குளம் ஒன்று காணப்படுகின்றது.

அந்தக் குளம் புனரமைக்கப்பட் டால் 300 ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப் பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் எனக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-13)



## பெண் பொலிஸ் விபத்தில் சாவு!

கொழும்பு, ஜன. 30

மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பேபுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த வரகாபொல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 52 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## முல்லைத்தீவு மைதானத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 30

முல்லைத்தீவு மாவட்ட பொது மைதானம் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகிறது.

மைதானத்தைப் புனரமைக்க அதிகாரிகள் முன்வரவேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இதுதொடர்பாக கரைதுறைபற்று பிரதேசசபையின் முன்னாள் தவி சாளர் க.விஜிந்தனிடம் கேட்டபோது, மைதானம் புனரமைப்ப தற்கான நிதி கிடைக்காமையால் மைதானத்தின் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய முடியவில்லை. மைதானத்தை புனரமைப்ப தற்கு 3 கோடி ரூபா வரை நிதி தேவைப்படுகிறது.

பல தடவைகள் நிதி வரும் என கூறப்படும்போதும் நிதி இதுவரை கிடைக்கவில்லை. - என்றார். (ச-13)

### பிரிட்டன் தேர்தலில்

## புலம்பெயர் பிரஜைகளும் வாக்களிப்பதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன. 30

பிரிட்டனில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வெளிநாடுகளிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளும் வாக்களிக்கக்கூடிய விதத்தில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் பிரிட்டிஷ் பிரஜைகள் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பரப்புரைகளுக்கு பணம் அனுப்ப விரும்புவதையடுத்து இந்த ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தொடர்பாடல் பணிப்பாளர் கிரெக் வெஸ்ற்வூட் தெரிவித்தார். தேர்தலில் வாக்களிக்க விரும்பும் வெளிநாடு வாழ் பிரிட்டிஷ் பிரஜைகள் ஐந்தே நிமிடங்களில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். மூன்று வருடத்துக்கொரு முறை தமது பதிவுகளை மீளாய்வு செய்துகொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## குப்பிளானில் 'பெட்டகம்' திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம் குப்பிளானில் 'பெட்டகம்' எனும் ஆவண சேகரிப்பு நிலையம் கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஆவண மையத்தை வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியும் சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதி லிங்கம், பொருளியல் ஆய்வாளர் இரானியேல் ஆகியோர் இணைந்து திறந்தனர்.

நிகழ்வில் சமூக விஞ்ஞான ஆய்வு மைய செயற்பாட்டாளர்கள், கிராம மக்கள், யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்ல தலைவர் சி.தில்லைநாதன், குரலற்றோரின் குரல் அமைப்பு நிறுவுநர் கோமகன், பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர் தனபாலசிங்கம் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-60)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனக்கசப்புகள் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். நண்பர்கள் வகையில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. விநாயகரை வழிபடுவது நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அனுகூலம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும் நாள். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். யோகா தியானத்தில் மனம் லயிக்கும். புதிய பாதை தெரியும் நாள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். இலாபம் அடைவீர்கள். வாகனங்களைச் சரி செய்வீர்கள். உழைப்பால் உயரும் நாள். வழிபடத் தடைகள் விலகும். இழப்புகளைச் சரி செய்வீர்கள். நிம்மதி உண்டாகும். உற்சாகமான நாள்.

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் இலாபம் சம்பாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**விருச்சிகம்:** மனஉளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

**தனுசு:** சோர்வு, களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மகரம்:** எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களால் பிரச்சினைகள் வந்து செல்லும். அதிகம் உழைக்க வேண்டிய நாள். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கும்பம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்னுரிமை கிடைக்கும். மரியாதை கூடும் நாள்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றிபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிச்சை புகினும் வெசாக்கை விடேல்!

கூடிப்பது கூழ், கொப்பளிப்பது பன்னீர் என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. எந்த விடயத்துக்கு இது பொருந்துகின்றதோ இல்லையோ, இலங்கையின் அண்மைக்கால அரசியலுக்கும் அதன் நகர்வுகளுக்கும் இந்த முதுமொழி கச்சிதப் பொருத்தம். விடயம் என்னவென்றால், எதிர்வரும் மே மாதத்தில் இடம்பெறவுள்ள வெசாக் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையிடம் நிதியுதவியைக் கோரியிருக்கின்றது இலங்கை. ஒரு பண்டிகையை யாசகமெடுத்தேனும் கொண்டாடிவிடுவது என்ற நிலைப்பாட்டில் இருப்பதற்காக அரசாங்கம் வெட்கப்பட வேண்டும். அதேநேரம், வரவிருக்கும் வெசாக் கொண்டாட்டங்களின் பின்னால் உள்ள ஆபத்தான செய்திகளையும் இலங்கையர்கள் ஆழ்ந்து உணர்ந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமுமாகும். இந்த வருடம் தேர்தல் காலமாகையால், அரசாங்கம் வறிய நிலையில் இல்லை என்ற எண்ணப்பாட்டை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க வேண்டிய கட்டாயம் ஆளும் தரப்புக்கு இருக்கவே செய்கின்றது. ஆதலால், வரவிருக்கும் வெசாக் பண்டிகையை கோலாகலமாகக் கொண்டாடவே அரசாங்கம் முனையும். அதற்காக பல மில்லியன் ரூபாவை வாரியிறைக்க வேண்டி ஏற்படும். இவ்வாறானதொரு பின்னணியில்தான் இந்த நிதியுதவியை அரசாங்கம் கோரியிருக்கலாம்.

அதைவிட, மதம் சார்ந்த கொண்டாட்டங்கள் தற்போது இலகுவாக மக்களை ஒன்றிணைக்கும் விடயங்களாக மாறிவிட்டன. இந்தியாவில் அண்மையில் இடம்பெற்ற அயோத்தி ராமர் கோவில் திறப்புவிழாவின் பின்னர் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சிக்கு அங்கு பல மடங்கு செல்வாக்கு அதிகரித்துள்ளது. இந்தக் கொண்டாட்டங்கள் ஏற்படுத்தியுள்ள 'ராம தேசம்' என்ற மாயையை வைத்தே, வரவிருக்கும் மக்களவைத் தேர்தலை பாரதிய ஜனதாக் கட்சி எதிர்கொள்ளவுள்ளது. இந்திய எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் நின்று பாரதிய ஜனதாவை நோக்கி தற்போது முன்வைக்கும் மிகப்பெரும் குற்றச்சாட்டும் இதுதான். இவ்வாறானவொரு பார்வையில்தான் வரவிருக்கும் வெசாக் பண்டிகையை அரசாங்கம் எதிர்கொள்ளப் போகின்றதா? என்ற நியாயமான சந்தேகங்களும் எழவே செய்கின்றன.

வெசாக் பண்டிகையைப் பெருமெடுப்பில் முன்னெடுத்து, அதன்மூலம் 'இலங்கை ஒரு பௌத்த தேசம்' என்ற எண்ணப்பாட்டை வலிந்து உருவாக்கி அதை வாக்குகளாக மாற்ற ஆளும் பெரமுனவும், அதன் நிழலாக இருக்கும் ஜனாதிபதி ரணிலும் முனையலாம். ஆதலால், வெசாக் பண்டிகை தொடர்பான தீர்க்கமான கருத்துகளை - நிலைப்பாட்டை - பின்னணியை எதிர்க்கட்சிகள் ஓரணியில் நின்று வெளிப்படையாக இயம்பவேண்டும். மாறாக, சிங்கள பௌத்த வாக்குகளை கருத்திற்கொண்டு வழக்கம்போன்று கள்ளமௌனம் காக்கப்படுமாயின், அது இந்தப் பித்தலாட்டத்துக்கு எதிர்க்கட்சிகளும் உடந்தை என்ற எண்ணப்பாட்டையே சர்வதேசத்தை நோக்கி வலிதாகத் தோற்றுவிக்கும். இது பல இடங்களில் இலங்கையை நின்று கொல்லும்.

பொருளாதாரப் பேரிடரிலிருந்து நாட்டை மீட்டுச் சீர்ப்படுத்தத் தேவையான உட்கட்டுமானங்கள் இன்னமும் அமைக்கப்படவில்லை, தன்னிறைவு காணக்கூடிய துறைகளில்கூட முதலிடுவதற்கு நிதிப் பற்றாக்குறையை அரசாங்கம் நீண்டகாலமாகவே எதிர்நோக்கியுள்ளது, கடன்கள் இல்லாத இலங்கை உருவாக்கப்பட வேண்டுமாயின்புதிய தொழில்துறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுகின்றது, வர்த்தகச் சுழற்சி இன்னமும் சீர்ப்படுத்தப் படவில்லை. இவ்வாறாக எதற்கெடுத்தாலும் 'இல்லை', 'பற்றாக்குறை' என்ற நிலையில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும்போது, வெசாக் கொண்டாட வேண்டும் அதற்கு நிதிதேவை என்று ஐ.நா.விடம் கேட்பதற்குக்கூட ஓர் அசாத்தியத் துணிவுவேண்டும். 'பிச்சை புகினும் வெசாக்கை விடேல்' என்ற நிலைப்பாடு இருக்கும் வரை இந்த நாடு உருப்படப் போவதில்லை.



# வற் அறவீட்டில் மோசடி: சோதனைகள் ஆரம்பம்

### இறைவரித் திணைக்களம் தகவல்

**கொழும்பு, ஜன.30**

**மோசடியான முறையில் பெறுமதி சேர் (வற்) வரியை வசூலிக்கும் நிறுவனங்களைக் கண்டறிய, உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் சோதனையை ஆரம்பித்துள்ளனர் என்று அந்தத் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

பெறுமதி சேர் வரியை அறவிடும் வர்த்தக நிறுவனங்கள் அது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் அவசியமாகும். அவ்வாறு பதிவு செய்யாமல், நுகர்வோரிடம் இருந்து மதிப்பு கூட்டு வரி வசூலிக்கும் செயற்பாடுகள் அண்மைக்காலமாக பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றது.

பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் அவர்களின் வற் பதிவு எண்ணை பார்வைக்குக் காண்பிக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்யாத நிறுவனங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ரயில் பொதி கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 30

ரயில் பொதிக் கட்டணங்கள் அதிகரிப்படவுள்ளன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் இந்தக் கட்டணங்கள் உயர்த்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பெண்கள் மீது வன்முறை '109'க்கு அறிவிக்கலாம்

கொழும்பு, ஜன. 30

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தொடர்பாக முறைப்பாடு செய்ய தனியான தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 109 என்ற தொலைபேசி இலக்கமே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். (ச-இ)

## பெண்களிடம் சேட்டை: உடன் சட்டம் பாயும்!

பொதுவெளியில் பெண்கள் மீது அநாகரிகமாக நடந்துகொள்பவர்கள் உடன் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பஸ்களில் பயணிக்கும் பெண்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும். தெருக்களில் பெண்களிடம் அநாகரிகமாக நடந்து கொள்ளல், தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு முடிவு கட்டப்படும்.

இதற்கென தற்போது புலனாய்வாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

## பகிடிவதை; அறுவர் கைது

கொழும்பு, ஜன. 30

மாணவி ஒருவரை பகிடிவதைக்கு உள்ளாக்கியமை தொடர்பில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சமனலவெவ பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, மேற்குறித்த மாணவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். (ச-இ)

## நாளை

31.01.2024

**புதன்கிழமை**

**தை – 17**

சுபநேரம் : 05.06 – 06.36

ராகுகாலம் : 12.36 –02.06


## நாளொரு நல்வார்த்தை

**உங்களுடைய எதிரிகளை தன்னுடைய எதிரிகளாக நினைப்பவனே உங்கள் நண்பன்.**

**- ஆபிரகாம் லிங்கன்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதக் கொள்வனவில் உக்ரைனில் ஊழல்கள்



கீவ், ஜன. 30

**ரஷ்யாவுக்கு எதிரான போர் தீவிரமாக இடம்பெற்று வரும் பின்னணியில் உக்ரைன் அதிகாரிகள் பலர் ஆயுதக் கொள்வனவின்போது ஊழல் மோசடியில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளையடுத்து, கடந்த இரண்டு வருடங்களாக உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் மோதல் இடம்பெற்று வருகின்றது. ரஷ்யப் படைகளை அடக்குவதற்காக உலக நாடுகள் பலவும் உக்ரைனுக்கு பெருமளவு நிதியை வழங்கி வருகின்றன.

அத்துடன் பில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளையும் உலக நாடுகள் வழங்கி வருகின்றன. இவ்வாறு வழங்கப்பட்ட நிதியுதவிகளை உக்ரைன் அதிகாரிகள் பலர் ஊழல் மோசடியில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது.

40 மில்லியன் டொலர் பெறுமதியான தொகை இவ்வாறு மோசடியாக களவாடப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஊழலை 'ரஷ்ய ஆக்கிரமிப்பை விடவும் மோசமானது' என்று உக்ரைன் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இது தொடர்பில் விரிவான விசாரணையொன்றை நடத்துவதற்கு உக்ரைனின் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி உத்தரவிட்டுள்ளார். (ம)

# பிரேசிலில் நிலநடுக்கம்

பிரேசிலியா, ஜன. 30

பிரேசில் நாட்டில் நேற்றுச் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 6.3 அலகுகளாகப் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மேற்குப் பகுதியில் 592 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் ஏதும் உடனடியாக வெளியாகவில்லை.

ஆயினும் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்களோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பா.ஜ.க. கூட்டணியே தேர்தலில் வெல்லும்



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியே வெற்றிபெறும் என்று அ.தி.மு.க.வின் முன்னாள் பொதுச்செயலரான ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இண்டியா கூட்டணி 'ஆண்டி மடம்' என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கூட்டணியில் இருந்து ஒவ்வொருவராக வெளியேறி வருகின்றனர்.

இந்தியாவை வலிமைமிக்கதாக உருவாக்க பிரதமர் மோடி பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். வரும் மக்களவைத் தேர்தலில் அவர் மீண்டும் பிரதமராக வேண்டும் என்ற கருத்து நாடு முழுவதும் வலுப்பெற்று இருக்கிறது. எனவே, பா.ஜ.க. தலைமையிலான கூட்டணிதான் வெற்றிபெறும். எங்கள் கூட்டணியின் தலைமை பா.ஜ.க.தான். - என்றார். (ம)

# பரிஸை முற்றுகையிட விவசாயிகள் திட்டம்!

பரிஸ், ஜன. 30

பிரான்ஸின் தலைநகர் பரிஸை காலவரையறை இன்றி முற்றுகையிடவுள்ளதாக நாட்டின் இரண்டு பிரதான விவசாயத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

உரத்தின் விலை அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு, மானிய உதவிகள் இல்லாமை என்பவற்றின் காரணமாக மேற்குலக நாடுகளின் விவசாயிகள் அண்மைக்காலமாக மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸிலும் இந்தத் தாக்கம் உணரப்பட்டுள்ள நிலையில், மிகப்பெரிய தொரு தொழிற்சங்க நடவடிக்கைக்கு அங்குள்ள விவசாய சங்கங்கள் அண்மைக்காலமாகத் தயாராகி வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே பிரான்ஸின் தலைநகரை முற்றுகையிடும் அறிவிப்பு விவசாயத் தொழிற்சங்கங்களிடமிருந்து வந்துள்ளது.

அத்துடன், தலைநகருக்கு தெற்கே உள்ளமிகப்பெரிய மொத்த உணவுச் சந்தையை முற்றுகையிடுவதற்கும் அவர்கள் உத்தேசித்துள்ளாதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ம)

# பூமிக்கு அருகில் நீர் நிறைந்த கிரகம்

வொஷிங்டன், ஜன. 30

பூமியில் இருந்து 97 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஒரு கிரகத்தின் வளிமண்டலத்தில் நீர் நிறைந்து இருப்பதை அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் கண்டுபிடித்துள்ளது.

இதனை நாஸாவின் ஹப்பிள் ஸ்பேஸ் தொலைநோக்கி கண்டறிந்துள்ளது.

பூமியைவிட இரண்டு மடங்கு பெரிதாக இருக்கும் 'ஜிஜே 9827டி' என்ற இந்தக் கிரகத்தில் நீர் மூலக்கூறுகள் அதிகமாக இருப்பதை நாஸா விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதற்கு முன்பு கண்டறியப்பட்ட நீர் மூலக்கூறு இருக்கும் கிரகங்களோடு ஒப்பிடும்போது இது பூமிக்கு மிகவும் அருகில் இருக்கிறது என்றும் விஞ்ஞானிகள் கூறினர். (ச-இ)



## ராபா எல்லையைக் கடக்க
# பல்லாயிரம் டொலரை செலவிடும் பலஸ்தீனர்

காஸா, ஜன. 30

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான மோதலால், எகிப்தின் ராபா எல்லையைக் கடந்து வெளியேறுவதற்காக, பல்லாயிரம் டொலரை இடைத்தரகர்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக பலஸ்தீனர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இஸ்ரேல் தொடர்ந்துவரும் இந்தத் தாக்குதலால், காஸாவை விட்டு வெளியேறுவதுதான் தற்போது அங்கு முகாமிட்டுள்ள அப்பாவிப் பொதுமக்களின் ஒரே தெரிவாக உள்ளது.

காஸாவில் இருந்து பலஸ்தீனர்கள் வெளியேறினால் அது காஸாவை இஸ்ரேல் இலகுவாக ஆக்கிரமிக்க வழிசெய்யும் என்பதால் ராபா எல்லையில் கடும் கண்காணிப்பை எகிப்து மேற்கொண்டுள்ளது. (ம)



# கியான்வாபியை மீண்டும் இந்துக்களிடம் வழங்குக

## அயோத்தியின் தொடர்கதையாகிறதா?

புதுடில்லி, ஜன. 30

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள கியான்வாபி இடத்தை முஸ்லிம்கள் இந்துகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று விஸ்வ இந்து பரிஷத் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வாரணாசியில் கியான்வாபி மசூதி அமைந்துள்ள இடத்தில் கோயில் இருந்ததற்கான உறுதிப்படுத்தும் ஆதாரங்களை இந்தியத் தொல்லியல் துறை சில நாள்களுக்கு முன்னதாக வெளிப்படுத்தியது. இந்த நிலையிலேயே அந்த மசூதியை மீண்டும் இந்துக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் தலைவர் அலோக் குமார் வெளியிட்ட அறிக்கையில், கியான்வாபி மசூதியில் கோயில் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனவே மசூதியை வேறு பொருத்தமான இடத்துக்கு மாற்றுவது குறித்து திறந்த மனதுடன் பரிசீலித்து முடிவெடுக்கவேண்டும்- என்றுள்ளது.

இதேவேளை கியான்வாபி மசூதியை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து, அந்த மசூதி இந்துக் கோவிலின் மீது கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துமாறு தொல்லியல்துறையிடம் வாரணாசி மாவட்ட நீதிமன்றம் கடந்த வருடம் ஜூலை மாதம் கேட்டுக்கொண்டது. இந்தக் கோரிக்கைக்கு அமையவே மசூதியில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அது இந்துகளின் ஆலயத்தின் மேல் கட்டப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.30

வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் விருது தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கலைக்குரிசில் விருது, இளங்கலைஞர் விருது, சிறந்த நூற்பரிசுத் தெரிவு, போட்டிகளுக்கான நடுவர்கள் குழு ஆகிய விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்புகொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களை 0212054105 என்ற தொலைபேசி இலக்கத்தினூடு பெற்றுக் கொள்ள முடியும். (ய)

## நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், பதவி வெற்றிடம்

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை தலைவர், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி என்னும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக 27.02.2024ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வயதெல்லை 18-45 வரை கூட்டுறவு சேவையிலுள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது என்பதுடன் கூட்டுறவு நிறுவனத்தில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கும் போது நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

**1.பொதுமுகாமையாளர் :- 101/10 பதவி வெற்றிடம் :- 01**
**சம்பள அளவுத்திட்டம் - 19745.00–225x10 – 250x10-24495.00** ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.

**கல்வித்தகமை:-**
அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்ட பதவியில் முகாமைநிலை/ மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமைநிலை/ மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/அங்கீகரிக்கப்பட்ட வர்தத்க / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலைப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**2) பதவி :- கிராமிய வங்கி முகாமையாளர்:- 205/12 பதவி வெற்றிடம் :- 01**
**சம்பள அளவுத்திட்டம் - 18820.00–170x10 – 185x10-22370.00** ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.

**கல்வித் தகமை:-**
அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்ட பதவியில் கிராமிய வங்கி பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவுப் ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது நான்கு (04) ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவுப் ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் நிதிச் செயற்பாட்டுடன் தொடர்புடைய கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**3) பதவி :- கிராமியவங்கி எழுதுனர்:- 300/15 பதவி வெற்றிடம் :- 01**
**சம்பள அளவுத்திட்டம் - 17435.00–145x10 –160x10-20485.00** ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.

**கல்வித்தகமை:-**
அ) (i) கூட்டுறவுப் ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் இரண்டு 02 வருட அனுபவம் அத்துடன் 3 மாதங்களுக்கு குறையாத Ms Office கற்கை நெறி/ அதனை ஒத்த கணனி கற்கை நெறியினை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் . **அல்லது**

ii) கூட்டுறவுப் ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிபக்க உருவாக்குனர் பதவியில் 04 வருட அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரணதரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தழிழ், கணிதம் உட்பட 6 பாட சித்தி அத்துடன் 3 மாதங்களுக்கு குறையாத Ms Office கற்கை நெறி அல்லது அதனை ஒத்த கணனி கற்கை நெறியினை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) பிரிவு அல்லது (ஆ) பிரிவு தகமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியியல் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**4)பதவி :- கணனிப்பக்க உருவாக்குனர்:- 322/15 பதவி வெற்றிடம் :- 01**
**சம்பள அளவுத்திட்டம் - 17435.00–145x10 –160x10-20485.00** ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.

**கல்வித்தகமை:-**
அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணனிப்பக்க உருவாக்குனர் பதவியில் இரண்டு 02 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தழிழ்மொழி/ கணிதம் என்பனவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தியுடன் அரச/அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேர MS OFFICE/ அதனையொத்த கணனி பாட நெறிக்கான சான்றிதழ். **அல்லது**

இ) அரச/அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேர கணனி பாட நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்

**5) பதவி :- உற்பத்தி உதவியாளர்:- 326/16 பதவி வெற்றிடம் :- 01**
**சம்பள அளவுத்திட்டம் - 16975.00–135x10 –150x10-19825.00** ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்
**கல்வித்தகமை:-**
அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஸ்ட தராதரப்பத்திரம் / தரம் 08 கல்விச் சான்றிதழ்.

**தலைவர்,**
**பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி.**
024 222 8552

## நிர்வாக தெரிவு

தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார அதிகாரசபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை புதன்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ய-9)

## விசேட பொதுக்கூட்டம்

யா/விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 11.02.2024ம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெற இருப்பதால் அனைத்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/விக்ரோறியாக் கல்லூரி**
**சுழிபுரம்.**

(CS 53769 V-1)

## காரைநகர் அபிவிருத்திச் சபை
## புதிய யாப்பினை அங்கீகரிப்பதற்கான விஷேட பொதுக்கூட்டம்

**தலைமை** : விஸ்வலிங்கம் ஹம்சன் (காரைநகர் அபிவிருத்திச் சபை தலைவர்)
**இடம்** : காரைநகர் பிரதேச கலாசார மண்டபம், வல்ந்தலைச் சந்தி, காரைநகர்
**காலம்** : 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்** : முற்பகல் 10.00 மணி


**குறிப்பு:**
08.01.2024 ம் திகதி வரை இணைந்து கொண்ட ஆயுள்கால அங்கத்தவர்கள் மற்றும் 2023 ம் ஆண்டு வருட சந்தா செலுத்திய அங்கத்தவர்களையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் 17.12.2023 ம் திகதி மற்றும் 07.01.2024 ம் திகதிய இரு விஷேட பொதுக்கூட்டங்களும் கோரமின்மை காரணமாக கூட்டம் நடைபெறவில்லை. இந்த கூட்டத்தில் கட்டாயம் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதோடு **கலந்துகொள்ளாதவர்களுடைய அங்கத்துவம் எதிர்காலத்தில் தாங்களாகவே அங்கத்துவத்தில் இருந்து விலகியதாக கருதி அங்கத்துவம் அற்றுப் போக நடவடிக்கை எடுக்கப்படும்** என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கரைநகர் அபிவிருத்திச் சபை,**
**சின்னாலடி, காரைநகர்.**
**தொலைபேசி இல. 021 221 1757**
**29.01.2024**

**பொன்னம்பலம் பரந்தாமன்**
**செயலாளர்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 13 . 06 . 1947



**மறைவு** 27 . 01 . 2024

## பிலிப்பையா பிரான்சிஸ் (செல்வரட்ணம்)

3ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், ஆடியபாதம் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா - பிரான்சிஸ் கடந்த 27.01.2024 சனிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா - லில்லிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (வைத்தியர்) பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகலட்சுமியின் அன்புக் கணவரும், மரிய கஷில்டா (சமுர்த்தி வங்கி - யாழ்ப்பாணம்), மைதிலி, ஜென்சி, அன்ரனீல், டெனிஸ்காந் (சமூர்த்தி வங்கி - வேலணை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ்குமார் (குமார் பிறிண்டஸ்), பற்றிக்சிறிதரன், கரன்சன், சர்மிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஸ்வின், கிறிஸ்தர்சன், பிறின்ஸ்சுஜித், கன்சிகா, ஜெர்சன், அகன்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ், மேரியான்பிளம்சம் (கிளி), இம்மானுவேல் மற்றும் திரேசா, காலஞ்சென்றவர்களான ஜெயக்கொடி மேரிறிலின்ரா, ரெனிஸ்லஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வர்களான மதலேன்னம்மா, சோமசுந்தரம் மற்றும் றெஜினாமலர், பிரான்ஸ், றஞ்சிதமலர், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் மாளினி, காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் குகனேசன், சிவலோகநாதன், காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் தியாகரதி, காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் இரத்தினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளைமறுதினம் (01.02.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ்ப்பாணம் புனித அடைகல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் அல்லைப்பிட்டி புனித கார்மேல் மாதா ஆலயத்தில் ஆசிர்வாதத்திற்காக வைக்கப்பட்டு, அல்லைப்பிட்டி புனித கார்மேல் மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**மகன் - 077 648 0799**
**மகன் - 076 582 2987**
**மருமகன் - 077 392 0797**

(CS53761) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மின்சாரத்தால் கட்டணம் குறையும்

கொழும்பு, ஜன.30

இலங்கை இந்திய இயற்கை எரிவாயு மின்சார உற்பத்தித் திட்டத்தின் கீழ் இந்தியாவுக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்யும் பட்சத்தில் இலங்கையில் மின்கட்டணம் வெகுவாக குறையும் என இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ்ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தியாவின் 75 ஆவது குடியரசுதின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். மேலும் இலங்கையின் அபி விருத்திக்கென 5 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட தொகையை இந்தியா வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ப-6)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 13.06.1947 மறைவு 27.01.2024

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. பி. டெனிஸ்காந் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் பிலிப்பையா பிரான்சிஸ்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவின் துயரில்:
பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.



1. வரவேற்பாளர் (இரவு)
2. ஒப்புநோக்குனர் (பகல், இரவு)
3. கிராபிக் டிசைனர் (பகல், இரவு)

நேரில் சமுகமதரவும்.
காலம்: 31.01.2024 (புதன்கிழமை)
நேரம்: காலை 9.00 மணிமுதல் முதல் பி.ப 2.00 மணிவரை.

**உதயன் பணிமனை**
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு

யாழ்.நகரப் பகுதியில் உள்ள ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு

Whatsapp/ Viber
077 830 2838, 071 057 1706


## வேலையாட்கள் தேவை

கொழும்பிலுள்ள அலுமினிய Fitting வேலை தளத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. வேலை பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 87 96 620

## மரண அறிவித்தல்

மலர்வு 01 . 01 . 1938



உதிர்வு 28 . 01 . 2024

### முத்தையா இரத்தினசபாபதி

(முன்னாள் இயந்திரவியல் மேற்பார்வை அதிகாரி (முஹாரி), இலங்கை போக்குவரத்து சபை)

எழுதுமட்டுவாழ் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இரத்தினசபாபதி அவர்கள் கடந்த (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை அதிகாலைப் பொழுதில் பெரியகேணிப் பிள்ளையாரின் திருவடிகளைப் பற்றிக் கொண்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா இராசம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதி அவர்களின் ஆருயிர்க் கணவரும், துளசீதரன், தாரணி (லண்டன்), பரணீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜெயதர்சனா, வைசாகரன் (லண்டன்), கவிதா ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும், புருசோத்தமன், விதுர்சன் (லண்டன்), அபினயன், அகத்தூயன், ஜீவந்திகா ஆகியோரின் நேசமிகு தாத்தாவும், அமரர்களான தம்பிராசா, துரைசிங்கம், சிவபாக்கியம், நடராஜா ஆகியோரின் அருமைத் தம்பியும், அமரர்களான சிவஞானம் வல்லிபுரம், கனகசிங்கம் மற்றும் சிவபாதசுந்தரம், சிவலோகம், இராசபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2024) புதன்கிழமை நாகர் கோவில் வீதி, எழுதுமட்டுவாழில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக தரவை இராமியன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகர்கோவில் வீதி,
எழுதுமட்டுவாழ்
077 075 7696
077 760 7183

(CR 41669) S-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 06 . 1933



மறைவு 29 . 01 . 2024

### அன்னலட்சுமி சிதம்பரநாத பிள்ளை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி சிதம்பரநாதபிள்ளை நேற்று (29.01.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சிதம்பரநாத பிள்ளையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அகிலாண்டநாயகி, திருச்செந்திநாதன் மற்றும் கதிர்காமநாதன், திரிபுரநாயகி, செந்தில்நாயகி, திருத்தணிகைநாதன், கேதாரநாயகி, குமரகுருபரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சடாச்சரம், காலஞ்சென்ற இராசநாயகி மற்றும் திவ்யலோசனி (சுந்தரி), பாஸ்கரன், தயாபரன், லதா, அருணன், காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிதம்பரவல்லி, சிதம்பரசுப்பிறமணியன், சிதம்பரவானதி, சிதம்பரபாரதி, சிதம்பரநடராஜன், சிதம்பரபாணன், சிதம்பரபாலினி, யதுசிகன், மாதுரி, மதுசன், அபிசான், சௌமியா, மதுசிகா, சிதம்பரலட்சுமி, சிதம்பரசெல்வன், கௌசிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கரிகாலன், ஆதித்யன், ஜஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2024) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 685 2120
077 949 1417

(CS 53776) S-1

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.

### புதுக்குடியிருப்பு சந்தைக் கடை குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல். - 2024.

புதுக்குடியிருப்பு சந்தை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான புதுக்குடியிருப்பு சந்தைக் கடை இல-2 நீண்டகால குத்தகையிடல் வாடகைக்கு விடுவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கும் காலம் :- 30.01.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 06.02.2024. பிற்பகல் 01.30 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்வி திறக்கப்படும் திகதி :- 06.02.2024. பிற்பகல் 02.00 மணி

| கடை இலக்கம்/ | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| கடை இல 02 | ரூபா. 1,440,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.** என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **புதுக்குடியிருப்பு சந்தைக் கடை இல......** என கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
3. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருப்பதுடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பிராந்தியபெறுகைக் குழு,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை,
புதுக்குடியிருப்பு.
2024.01.29.

தொலைபேசி இல:-0212291023 email-pkipsmullai@gmail.com

(CR 41668) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் முத்துச்சாமி

(யாழ்.மின்சாரசபை முன்னாள் ஊழியர், இலங்கை மின்சார சபை)



மலர்வு 17.03.1951 — உதிர்வு 27.01.2024

கண்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் முத்துச்சாமி கடந்த 27.01.2024 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - பேச்சியம்மாள் தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதியினரின் அன்புமிகு மருமகனும், புஸ்பகௌரியின் அன்புக் கணவரும், பிரசன்னா, பிரியா, பிரியதர்ஷினி, காலஞ்சென்ற பிரியஷாலினி மற்றும் பிரியலோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நடராஜா சரோஜினி, கைலாயநாதன் முத்துலெட்சுமி, தட்ஷணாமூர்த்ரி மற்றும் ஷாந்தி, காலஞ்சென்றவர்களான குணசேகரன், சுப்பிரமணியம் மற்றும் விஜயகுமார் பாலசரஸ்வதி, ஷண்முகநாதன் கனகேஸ்வரி, பாலகிருஷ்ணன் கலைவாணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசுந்தரகுமார் (சின்னக்கிளி), காலஞ்சென்ற யோகராசா மற்றும் சிவநாதன் (செல்வம்), சிவாநந்தன், சிவகுமார், புஷ்பலதா, புஸ்பராஜ், ரவிச்சந்திரகுமார், துரைராஜ், ரவீந்திரன், சின்ராஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நந்தா, சுகந்தன், தர்ஷினி, குகன், புவனராஜ், புஸ்பராஜ், திலகராஜ், கோகிலராஜ், கிருஷ்ணராஜ், மிருதுலா, மிருதுலன், சாரு, நிருஜன், திபி, விஷ்ணு, விஜயபாபு, விஜிதா, டினேஸ், சுகன்யா, சிவவிஜி, சிவசங்கர், சிவராகவன், சிவரம்பியா, மதன், ஜெயப்பிரியா, சுதன், ராஜ், மயூரி ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷாந்தினி, காலஞ்சென்ற அனுசீலன் மற்றும் அனுராஜ், கோபிராஜ், தனுசியா ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
கௌரி (மனைவி - 077 919 2732)
செல்வம் (மச்சான் - 077 302 6958)

(cs 53736) (N-1)

## இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

### படகு அரசுடைமை

யாழ்ப்பாணம், ஜன. 30

பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்கள் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்பது மாதங்கள் சிறைத் தண்டனை என்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே 10 இந்திய மீனவர்களும் நிபந்தனை அடிப்படையில் நீதிவான் பொன்னுத்துரை கிருசாந்தனால் விடுதலை செய்யப்பட்டனர்.

மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட படகை அரச உடைமையாக்குமாறும், மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட கைத்தொலைபேசி உள்ளிட்ட வேறு உடைமைகளை மீள வழங்குமாறும், விடுதலை செய்யப்பட்ட 10 மீனவர்களையும் மிரிஹறான முகாமுக்கு அனுப்பி இந்தியாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

படகின் உரிமையாளருக்கான வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது. (அ-ஒ-66)



தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட விடத்தற்பளை கெற்பேலி கிராமத்தில் வாழ்வாதார தேவையுடைய குடும்பம் ஒன்றுக்கு சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியில் கோழிப்பண்ணை அமைத்து அண்மையில் வழங்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரனின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போது சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்ற விடத்தற்பளை கிராமத்தைச் சேர்ந்த துஷ்யந்தன் நந்தினி தம்பதிகளின் நிதிப் பங்களிப்பிலியே குறித்த வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. (ப-125)



அளவெட்டி கிழக்கு, கும்பளைப் பகுதியில் விஜயகாந்தின் 31 ஆவது நாள் நினைவை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜகாந்த் ரசிகர்கள் அஞ்சலி செலுத்தினர். (ப-125)



யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இதுவரை காலமும் பதவி வகித்த மஞ்சுள செனரத் கொழும்புக்கு இடமாற்றலாகிச் செல்லும் நிலையில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனை மரியாதை நிமித்தமாக கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். சந்திப்பில் யாழ்.மாவட்டச் செயலர் இடமாற்றலாகிச் செல்லும் பொலிஸ் அத்தியட்சகருக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார். (ப-66)




தேசிய ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் சாதனை புரிந்த வடக்கு மாகாண விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் சுதுமலையில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபமொன்றில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க அமைச்சரானார் சர்ச்சைக்குரிய லொஹான்!



கொழும்பு, ஜன.30

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

லொஹான் ரத்வத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். இவர் முன்பு சிறைத்துறை சீர்திருத்த அமைச்சராகப் பதவி வகித்தபோது, அநுராதபுரம் சிறையில் தமிழ் அரசியல் கைதி ஒருவரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினார் என்று சர்ச்சைக்குள்ளாகி இருந்தார். அதையடுத்து அவர் 2021ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

(எ-26)


TECHNA
Technical Institute
Smart thinking leads to innovate
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549 technatechnicalinstitute

A/L 2023 பிரிவு க.பொ.த உயர்தர தொழினுட்பப்பிரிவு
இலவச செயன்முறை வகுப்புக்கள்
உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு P.நிரோஜனன்
இறுதிச் செயன்முறைப் பரீட்சை வரையான காலப்பகுதி முழுவதும் அனைத்து செயன்முறைகளும் தொடர்ச்சியாக இலவசமாக நடைபெறும்.
ஆரம்பம் ; 01.02.2024, வியாழன் மாலை 3.00 மணிக்கு
- B1, B2, SPOT செயன்முறைகள் பூரணமாக பயிற்றுவிக்கப்பட்டதன் பின்னர் செயன்முறை பரீட்சைகளும் நடைபெறும்.
- குழு அடிப்படையில் நடைபெறுவதால் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் நேர வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளுக்கான தொடர்புகள் ஏற்படுத்தி தரப்படும்.
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549 Technatechnicalinstitute

A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன
- தொடர்ச்சியாக வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- ஒவ்வொரு பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்

## மரண அறிவித்தல்

மலர்வு 24 . 05 . 1946



உதிர்வு 29 . 01 . 2024

### கந்தையா குமாரு

கெற்பேலி மேற்கு மிருசுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட (சாவகச்சேரி பிரதேச சபையின் ஓய்வு பெற்ற வருமான மேற்பார்வையாளர். சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னால் உறுப்பினர். சமாதான நீதவான் அகில இலங்கை) அவர்கள் 29.01.2024 திங்கட்கிழமை மாலை 05.30 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராசம்மா அவர்களின் பாசமிகு மகனும், குமாரு மனோன்மணி அவர்களின் கணவரும் பவானந்தம் சர்வானந்தன், சிவானந்தன், சிவானந்தி, பவானந்தி, கோடீஸ்வரி, நித்தியானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தி அம்பிகாவதி, யோகநாதன், தேவகுமார், தரிசன், டினோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்ரா, வேனுபா, திவந்ஷிகா, டனுசியன், அபிநயா, நவிசன், ஜனுஸ்கா, கனிசாந், அக்ரிகா, வாசிகாந், டஷ்மிகா, டனுசிகா, இஷானா ஆகியோர்களின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31.01.2024 புதன்கிழமை அன்று மதியம் 01.00 மணியளவில் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். அன்னாரின் ஆந்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

கெற்பேலி மேற்கு,
மிருசுவில்.

தொடர்புகளுக்கு: 077 844 8310, 077 826 5484, 077 759 9301.

(CS 27738) V-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 21 . 11 . 1935



விண்ணில் 28 . 01 . 2024

### மலக்கியாஸ் அன்னம்மா (லீலாவதி)

இல:11, செபஸ்தியார் வீதியை பிறப்பிடமாகவும் 125/2, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மலக்கியாஸ் அன்னம்மா அவர்கள கடந்த (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கஷ்பார் ஞானம்மாவின் அன்பு மகளும் நெடுந்தீவு பஸ்த்தியன் சவினம் ஆகியோரின் மருமகளும் அமரர் மலக்கியாசின் மனைவியும் பிலோமினா, பிரான்சிஸ், நீசா எட்னா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜேசுதாசன்(ராகுலன்), நொய்லின் பத்மராணி(புனிதவதி), லயோலா செல்வச் சீராளன்(பாபு), வின்சன் றொக்சி(பாஸ்கரன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரெலா, ஜேசுதாசன்(கிளை முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், யாழ்ப்பாணம்) கில்டா, சுதர்சினி ஆகியோரின் மாமியாரும் ஜசிந்தன், கோசிகா, கோல்பேட், ஒஸ்ரின் பேட், சுசான் பேட், சியோன் பேட், காருணியா, றெமியா, றிசான், சின்சியா, ஆகியோரின் பாசமிகு பேத்தியும் செல்லையா, அன்ரனியம்மா, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.01.2024 புதன்கிழமை பி.ப 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு தூய கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்
பி.ஜேசுதாசன் - 021 222 6275
ஜே.[illegible] - 076 703 [illegible]

125/2, 2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(CS 29326) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 09 . 1960



மறைவு 29 . 01 . 2024

### திருஞானச்செல்வம் ஆனந்தநடேசன் (ஜோதி)

(Coral Tasty Food Industries உரிமையாளர்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், 117, ஐயனார் வீதி, தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானச்செல்வம் ஆனந்தநடேசன் நேற்று (29.01.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருஞானச்செல்வம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஜயசிங்கம் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயகலாவின் அன்புக் கணவரும், சரவணஹரனின் (உயர்தர மாணவன், யாழ் இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும், கால்ஞ்சென்ற நளினியின் அன்புச் சகோதரனும், அமரர் பத்மநாதன் (ஆயுள்வேத வைத்தியர்) மற்றும் தயாபரன் (தயா அச்சகம்), விஜயராணி, விஜயதேவி, தயானந்தன், விஜயகுமாரி, விஜயகௌரி, தயாபாலன் (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமரகுருபரன், கோகிலரமணன், செல்வ பாரதி, பவதாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
விஜயகலா (மனைவி)
சரவணஹரன் (மகன்)
077 612 8268

(CS 29324) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

தூக்கில் தொங்கியதாக மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட சிறுவன் நேற்று திங்கட்கிழமை யாழ். போதனா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளான்.

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் சிறுவன் தூக்கில் தொங்கியதாக தெரிவிக்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தான். இந்நிலையில் அவர் அங்கு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-100)

## யாழ்ப்பாண மாவட்டத்தின் பண்பாட்டு பெருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜன. 30

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டச் செயலகமும், யாழ். மாவட்டப் பண்பாட்டு பேரவையும் இணைந்து முன்னெடுக்கும் மாவட்ட பண்பாட்டு விழா இன்று மாலை 2:30 மணியளவில் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

தமிழர்களுடைய பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் கலையம்சங்களை தாங்கிய பவனியோடு பண்பாட்டு விழா ஆரம்பமாகி தொடர்ச்சியாக பாரம்பரிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஒ-125)

# முன்னாள் இராணுவத்தளபதி சஜித் அணியுடன் சங்கமம்

கொழும்பு, ஜன. 30

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக தொப்பிகலை மற்றும் வாகரைச் சமரின்போது முக்கியமான வகிபாகம் வகித்த முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் அவர் அந்தக்கட்சியில் இணைந்துள்ளார். அவருக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுக் கொள்கைகள் தொடர்பான மூத்த ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்சவுக்கு நெருக்கமான படைத் தளபதிகளுள் ஒருவராக திகழ்ந்த தயா ரத்னாயக்க, கோத்தாபய ஆட்சிக்காலத்தில் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை தலைவராகவும், அமைச்சின் செயலராகவும் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)



## எட்கா...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனுஷ்கோடிக்கு அண்மையில் வந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தூரம் பார்க்கும் கருவி மூலம் மன்னார் நோக்கிப் பார்த்துள்ளார். பாலமும், வீதியும் அமைக்கத் திட்டமிடுகின்றனர். இதற்கிடையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எரிசக்திக் கூட்டமைப்பு பற்றி ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

நாட்டில் விவசாய உபகரணங்களுக்கும் 'வற்' விதிக்கப்பட்டுள்ளது. இதனால் உற்பத்திச் செலவு அதிகரிக்கும். ஏற்கனவே இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுகின்றது. அரிசி விலை அதிகரிக்கப்பட்டால் அரிசியும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும். உள்நாட்டு விவசாயம், உற்பத்தி பாதிக்கப்படும். உணவு பாதுகாப்புத் தொடர்பான அச்சுறுத்தலும் ஏற்படும்.

தற்போது எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முற்படுகின்றனர். இதன்மூலமும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள், முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இலங்கையின் சேவை சந்தையை இந்திய ஆக்கிரமிக்கும் நிலை உருவாகும். எட்காவால் இலங்கை பகுதியளவு இந்திய மாநிலமாக மாறும். இதனை நோக்கியே நகர்வுகள் இடம்பெறுகின்றன. இந்திய நிதி அமைச்சர் இலங்கை வந்தபோது அவர் தலதாமாளிகை சென்றார், மகாநாயக்க தேரர்களிடமும் ஆசிபெற்றார். இதெல்லாம் இதன் அங்கங்கள்தான்.

சேர, சோழ, பாண்டியர்களின் ஆக்கிரமிப்பின்போது மண்டியிட்டு பார்த்துக் கொண்டிருக்கவில்லை, எமது மன்னர்கள் காட்டுக்குச் சென்று, பழங்கள் சாப்பிட்டு, கஷ்டங்களுக்கு மத்தியிலும் சோழர்களுடன் சமரிட்டு நாட்டை மீட்டனர். அப்படிப்பட்ட எம்மை எட்கா மூலம் ஆக்கிரமிப்பதே இந்தியாவின் திட்டம் - என்றார். (அ-ஒ-44)

## அரிசியில்...

என கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டில் இலங்கை தன்னிறைவுடைய வகையில், நெல், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் பயிர்களுக்கு முன்னுரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

'2022ஆம் ஆண்டு 8 மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டபோதிலும் 2023ஆம் ஆண்டு அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை. நம் நாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்த அரிசியை இந்த நாட்டு மக்கள் வருடம் முழுவதும் உட்கொண்டார்கள் என்றே கூறவேண்டும். நெருக்கடியான நிலையிலும், அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளதால், இந்த ஆண்டு அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கவில்லை. கடந்த ஆண்டைப் போலவே வறட்சி மற்றும் வெள்ளத்தால் நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது. வறட்சியால் 65 ஆயிரம் ஏக்கரும், கனமழையால் ஒரு இலட்சம் ஏக்கரும் சேதமடைந்துள்ளன. வறட்சியால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. சுமார் 700 மில்லியன் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கனமழையால் மரக்கறிப் பயிர்கள் அழிந்ததே மரக்கறி விலை உயர்வுக்குக் காரணமாகும். சில விவசாயிகள் ஒரே விவசாய நிலத்தில் பலமுறை காய்கறி விதைகளைப் பயிரிட்டனர். ஆனால் அவை மழையால் அழிந்துவிட்டன. விவசாயிகளுக்கு நாங்கள் வழங்கிய 'நெட் ஹவுஸ்'களில் பயிர் செய்ததால், ஓரளவுக்கு மரக்கறிகள் சந்தைக்கு வந்தன. இன்னும் இரண்டு மாதங்களில் மரக்கறிகளின் விலை இயல்பு நிலைக்குத் திரும்பும் - என்றார். (அ-ஒ-இ)

## கடற்...

அரபிக்கடலில் காணாமல் போன இலங்கைப் படகு சீசெல்ஸ் கடலோரப் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டதாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப் படகு கடந்த 12 ஆம் திகதி 6 மீனவர்களுடன் திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்திலிருந்து தனது முதல் பயணத்தை ஆரம்பித்தது. அரபிக் கடலில் சோமாலியக் கடற்கொள்ளையர்களால் இந்தப் படகு கைப்பற்றப்பட்டதாக மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்டது.

படகு தொடர்பில் தேடிப்பார்க்குமாறு இலங்கை கடற்படையினர் பஹ்ரைனில் அமைந்துள்ள 40 நாடுகளை உள்ளடக்கிய கூட்டு கடல் படையணிக்கு அறிவித்தனர்.

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகைக் கண்டுபிடிக்க சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படை விசேட தேடுதல் நடவடிக்கையைத் தொடங்கியது. சோமாலியக் கடற்கொள்ளையர்களின் பிடியில் இருந்த படகைக் கண்டுபிடித்தனர். அத்துடன், இரண்டு சோமாலியக் கடற்கொள்ளையர்களும் சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படையினால் கைது செய்யப்பட்டனர். மீன்பிடிப் படகில் இருந்த 6 மீனவர்களும்பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## பிரதிப்...

சகர்கள் கலந்துகொண்டனர்.

இதுவரை காலமும் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய மஞ்சுள செனரத் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-20-26)

## 'அரகலய'...

ஐக்கிய மக்கள் சக்தியின் இந்தப் போராட்டத்தின் போது எந்தெந்த அரச அலுவலகங்கள் முடக்கப்படப்போகின்றன என்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை இன்றைய போராட்டத்தை முடக்குவதற்குப் பொலிஸார் தயாராகி வருவதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)

## 31 ஆயிரம்...

சௌத்பார் பகுதியில் கைவிடப்பட்ட அட்டைப் பண்ணையிலிருந்து 31ஆயிரம் உயிர்கொல்லிப் போதை மாத்திரைகளுடன் இளைஞனை நேற்று மாலை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

மன்னார் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில்திச்சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

சௌத்பார் புகையிரத நிலையத்தின் அருகில் கைவிடப்பட்ட அட்டைப்பண்ணைக் கொட்டிலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 31 ஆயிரம் உயிர்கொல்லிப் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. (அ-ஒ-56-213)

## கஞ்சாவுடன்...

மாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறப்புச் சுற்றுக்காவல் நடவடிக்கையில் சந்தேகத்துக்கிடமாக பயணித்த இளைஞனிடமிருந்து ஆயிரத்து 400 மில்லிகிராம் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றினர்.

இளைஞனுக்கு எதிராக மல்லாகம் நீதிவான்நீதிமன்றில் வழக்குத்தாக்கல்செய்து முற்படுத்தியபோது சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ஒ-125)

## ஹெரோய்னுடன்...

சாந்தையில் வைத்து இருவரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரு இளைஞர்களிடமிருந்தும் தலா 20 மில்லிக் கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் மீட்கப்பட்டதாகவும் இளைஞர்கள் இருவரும் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்கள் எனவும் இளவாலைப் பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-125)

## முல்லைக் கடலில்...

(வயது - 33) என்பவரது சடலமே கரையொதுங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மாத்தளன் கடலில் குளிக்கச் சென்றபோது இவர் கடலில் காணாமல் போயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-19)

## மருத்துவக்கழிவு...

'ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் 40 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் எரியூட்டி அமைக்கப்பட்டு வருகின்றது.

மருத்துவமனையில் நோயாளியுடன் தொடர்புடைய மருத்துவக் கழிவுகளைத் தகனம் செய்வதே இதன் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. கட்டுமான பணிகள் உட்பட எரியூட்டி அமைப்புப் பணிகள் யாவும் பெப்ரவரி மாத இறுதியில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மார்ச் மாதம் முதல் எரியூட்டி இயங்கத் தொடங்கும் - என்றார். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையும் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

(ப)

## TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு

**செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்**

- பொறியியல் தொழினுட்பம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

- ஆரம்பம் - 04.02.2024
- நேரம் - காலை 9.00 am

நவீன ஆய்வுகூட வசதிகளுடன் மற்றும் அனுபவம் மிக்க ஆசிரியர்குழாம்

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 017 5346

(cr.41623) (N-1)

## நெல் கொள்வனவு

எமது கம்பனியின் Agriculture Farmer Society மூலம் தங்களிடம் இருக்கும் நெல்லை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளோம்.

கோறா, வெள்ளைநாடு போன்ற புதிய பழைய நெல்வகைகளும் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: 024 434 6557

(CS 25690) V-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-கைதடி A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- கைதடி சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
- வடமாகாண சபை 300மீற்றர்
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

077 129 4999
076 788 0591

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாள் மற்றும் பெயின்ரர் தேவை

தொடர்புகளுக்கு:
076 316 5731, 070 606 5504

# குகபதமடைந்தார்

### யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த
## சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார்

**28.01.2024 அன்று குகபதமடைந்தார்**

அன்னார் இறைபதமடைந்த காலஞ்சென்ற முதலியார் நமசிவாயம், காலஞ்சென்ற அகிலாண்டநாயகி நமசிவாயம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களின் அன்பு மனைவியும். ஷமித்ரா, ரமணன், ஷன்ஜீத்தா ராமச்சந்திரன், குமரேஷ், ஷய்ந்தன் குமாரதாஸ் மாப்பாண முதலியார் ஆகியோரின் அன்புத் தாயும். ரமணன் ராமசந்திரன், பேராசிரியர் (டாக்டர்) சுதர்சன், ராமசந்திரன், (டாக்டர்) மிர்ணா குமாரதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், ஷர்மதா, ஷரண்யா, (டாக்டர்) ஷனாத், (டாக்டர்) பிரவிநாத், ஹறிஷ்நாத், ஷமாயா, ஷவாராயா குமரேஷ், அனீஷ்வரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2024) செவ்வாய்கிழமை அவரது நல்லூர் மாப்பாணர் வளவு இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்,
மாப்பாணர் வளவு, நல்லூர், யாழ்ப்பாணம்

(cr.41660) (N-1)

# அறிவித்தல்

அன்னை மடியில்
06 . 09 . 1939

ஆண்டவன் அடியில்
03 . 01 . 2024



## இராமலிங்கம் மயில்வாகனம்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்டு பின்னர் வள்ளிபுனம். புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் மயில்வாகனம்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) அவர்கள் கடந்த 03.01.2024 அன்று காலமானார்.

இறுதிக் கிரியைகள் இம்மாதம் 5ம் திகதி வள்ளிபுனத்தில் நடைபெற்றது.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் மாரிமுத்து தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும், பங்கயற்செல்வி, புனிதவதி, ரங்கநாதன், மற்றும் காலஞ்சென்றவர்களான மின்னாம்பிகை, குமரவேள், ஞானசேகரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீரங்கநாதன், பஞ்சலிங்கம், ஜெயலட்சுமி மற்றும் காலஞ்சென்ற ஞானலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கலையரசி, கிருபாகரன், தமிழரசி, தமயந்தி மற்றும் காலஞ்சென்ற மங்கையற்கரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார், சாருமதி, ராதாகிருஷ்ணன், ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவபாலன், கார்த்திக், பூஜா, நிவேதா, தீபிகா, ஜெயராமன், அபிஷாளினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 31.01.2024 அன்று கீரிமலையில் நடைபெறும். பின்னர் 02.02.2024 அன்று நண்பகல் 12.00 மணியளவில் அவரது வள்ளிபுனம் வீட்டில் இடம்பெறும் கிரியைகளுடன் கூடிய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரது மரணத்தின்போது நாம் துயருற்று இருந்தவேளை அனுதாபம் தெரிவித்து ஆறுதல்படுத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அன்பர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| கலையரசி | : 077 763 2496 |
| கிருபாகரன் | : 001 514 686 4344 |
| | 077 501 8618 |
| தமிழரசி (வாணி) | : 004 473 830 99420 |
| தமயந்தி | : 076 872 2328 |

தகவல்:
குடும்பத்தினர்

(C53770) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 11 . 1936

மறைவு
28 . 01 . 2024



## கந்தையா இராஜேஸ்வரி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா (தவராசா) இராஜேஸ்வரி அவர்கள் கடந்த (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசப்பா கமலாம்பாள் தம்பதிகளின் அன்பு மகளும், சபாபதிப்பிள்ளை காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை கந்தையா (தவராசா) அவர்களின் பாசமிகு மனைவியும், சந்திரசேகரன், ஜீவசேகரன், இந்துமதி, கோமதி, பாலசேகரன் (சேகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானேஸ்வரி, சிவகலை, திருச்செல்வம், ஞானகுமார், சூரியகலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருஷ்ணமேனன், அபிசன், ஆரூயன், ஆரபி, ஆதுஷன், சர்மிலன் + கயானி, யதீசன், மதுசன், சர்வினி, மதுமிலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
இந்துமதி (மகள்) - 077 656 9882
சேகர் (மகன்) - 076 400 0065

(CS 29321) S-1

தகவல்:
குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org